பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 39

சனிக்கிழமை
04 ஜனவரி 2025

மார்கழி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**கச்சதீவு பெருவிழா மார்ச் 14!**
» 03

**வடதாரகை விரைவில் சேவைக்கு**
» 04

**மியான்மர் அகதிகளை நாடுகடத்த தீர்மானம்!**
» 02

## அமெரிக்காவில் பஸிலுக்கு அளவுக்கதிகமான சொத்து

தகவல்கள் வழங்கத் தயார்
விமல் வீரவன்ஸ அறிவிப்பு



கொழும்பு, ஜன. 4
முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு அமெரிக்காவில் மிகவும் அதிகளவு சொத்துகள் உள்ளன என்று முன்னாள் அமைச்சரான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். ☞11

கல்வி அமைச்சின்

## மக்கள் தொடர்பு அதிகாரியாக யாழினி கங்காசுதன் நியமனம்!



கொழும்பு, ஜன. 4
இலங்கை கல்வி அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரியாக தமிழ்ப் பெண்ணான யாழினி கங்காசுதனை பிரதமர் ஹரிணி அமரசூரிய நியமித்துள்ளார். கல்வித்துறை ☞11

வடக்கு மாகாணத்தில்

# அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க உடன் நடவடிக்கை!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 4**
**வடக்கு மாகாணத்தில், அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை நியமிப்பதற்கு சிறப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பொலிஸ் வெற்றிடங்கள் தமிழ்ப் பொலிஸாரை வைத்து மிக விரைவாக நிரப்பப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.** ☞11

## சுண்ணக்கல் பாரவூர்தியால் சாவகச்சேரியில் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 4
யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை சிமெந்துத் தொழிற்சாலைக்கு நேற்றுமுன்தினம் இரவு சுண்ணக்கல் ஏற்றிச் சென்ற பாரவூர்தியொன்றால் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
அந்தப் பாரவூர்தியைப் பின்தொடர்ந்து காரில் சென்ற நாடாளு ☞11



டிப்பர் விபத்தில் உயிரிழந்த

## தாய்க்கும், குழந்தைக்கும் நீதிகோரிப் போராட்டம்!

கிளிநொச்சி, ஜன. 4
கிளிநொச்சியில் கடந்த மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த தாய்க்கும், குழந்தைக்கும் நீதிகோரியும், விபத்துகளைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியும் நேற்றுப் போராட்டம் இடம் ☞11

## மக்களின் மனவோட்டத்தை மாற்றவேண்டும் பொலிஸார்

அமைச்சர் சந்திரசேகரன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 4
பொலிஸார் தொடர்பில் பொதுமக்களுக்கு எதிர்மறைநிலைப்பாடே காணப்படுகின்றது. அந்த நிலைப்பாட்டையும் மனநிலையையும் பொலிஸார் மாற்ற வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகன் தெரிவித் ☞11

யாழ். மாவட்டப் பொலிஸாருக்கு

## போக்குவரத்துப் பிரச்சினை: தீர்த்துவைத்தார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 4
யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் திணைக்களங்களில் ஜீப் பற்றாக்குறை (போக்குவரத்துப் பிரச்சினைகள்) காணப்படுவதாக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதைத் ☞11

## வன்முறைக் குழுவின் வீடியோ: நவாலி இளைஞர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜன. 4
வன்முறைக்குழு ஒன்றின் 10ஆவது வருட நிறைவை முன்னிட்டு வீடியோவைப் பகிர்ந்த இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ☞11



**முச்சந்தி முரளி**

'பழனிக்கே பஞ்சாமிர்தமா? பொலிஸுக்கே போக்குவரத்துப் பிரச்சினையா?'

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

வவுனியாவில் பரிதாபம்



வவுனியா, ஜன. 4
வவுனியாவில் மின்சாரம் தாக்கி குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கார்த்திக் (வயது-45) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
வவுனியா, குடியிருப்புப் பிள்ளையார் ஆலயக் கேணியை தூய்மையாக்கும்போதே மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளார். ☞11



2 வருடங்களின் முன் இறந்தவரின்

## சடலம் நேற்றுத் தோண்டியெடுப்பு!

மன்னார், ஜன. 4
மன்னாரில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த ஜேசுதாசன் ரஞ்சித்குமார் (வயது-42) என்பவரின் சடலம் நேற்றுத் ☞11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொருவரிடமும் சராசரி 136,000 ரூபா வரிஅறவீடு

## புதிய அரசு மக்கள் மீது சுமை கம்மன்பில சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜன.4**

**2020ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இந்த ஆண்டில் அரசாங்கத்தின் வரி இலக்கு அடையப்பட வேண்டுமாயின் ஒவ்வொருவரிடமிருந்தும் சராசரியாக ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபா வரி அறவீடு செய்யவேண்டியுள்ளதாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசாங்கத்தின் வரி முறைமை நாட்டு மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தக்கூடியதுடன் அது நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. இந்த நடைமுறை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு நிகரானது. அத்துடன், வரிமுறையினால் தொழில் வல்லுநர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தேர்தலுக்கு முன்பதாக சர்வதேச நாணயநிதியத்துடன் நாட்டுக்கு நன்மை ஏற்படக்கூடிய நிபந்தனைகள் தொடர்பில் பேச்சு நடத்தப்படும் என ஆளும் கட்சியினர் குறிப்பிட்டிருந்தனர்.

எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்கள் காரணமாக இந்த வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்றது - என்றார். (ச-இ)

## ஐ.தே.க.செயலாளராக தலதா அத்துகோரள

கொழும்பு , ஜன. 4

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள நியமிக்கப்பட்டுள்ளார். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தலதா அத்துகோரள, சஜித் அணியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எம்.பி. பதவியைத் துறந்து விட்டு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தார். இந்நிலையிலேயே அவருக்குப் பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை இணைப்பதற்குரிய ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகவே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-44)




## ஒக்ரோபர் மாதத்துக்குள் மாகாணசபைத் தேர்தல்

கொழும்பு, ஜன.4

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் முடிந்த பின்னர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அறியமுடிகின்றது.

வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இதற்குரிய சட்டரீதியிலான நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது.

அதேவேளை உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நடத்துவதற்கும் அரசு தீர்மானம் எடுத்துள்ளது. மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னர் 2026 ஆம் ஆண்டு முதல் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (ச-44)

## ஐ.தே.க. சரிவுக்கு ரணிலே பொறுப்பு

கொழும்பு, ஜன.4

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியடைந்தமைக்கு ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூறவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் சமுர்த்தி வேலைத்திட்டம் இல்லாதொழிக்கப்பட்டமையும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோற்றதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.

1994 ஆம் ஆண்டு முதல் நான் 11 க்கு மேற்பட்ட அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளேன். எனவே, ரணில் விக்கிரமசிங்க எனக்கு அமைச்சுப் பதவி வழங்கவில்லை என்பதற்காக அவருடன் கோபம் எதுவும் இல்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி நாசமானதற்கு அவரே பொறுப்புக்கூறவேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

### 2025க்கான முதலாவது

## நாடாளுமன்ற அமர்வு செவ்வாயன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன.4

2025ஆம் ஆண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் ஜனவரி மாதம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## ‘தூய இலங்கை' வேலைத்திட்டத்தின் மாகாண அலுவலகம் யாழில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

‘தூய இலங்கை' வேலைத்திட்டத்தின் மாகாண ஒருங்கிணைப்பு அலுவலகம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, மீன்பிடி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு ‘தூய இலங்கை' வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (ச-26)

## லாப்ஸ் எரிவாயு விலைத்திருத்தம் திங்களுக்குள்

கொழும்பு, ஜன.4

இந்த மாதத்துக்கான லாப்ஸ் எரிவாயு விலைத்திருத்தம் தொடர்பான முடிவை எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் வழங்கப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது. இம்மாதத்தில் எரிவாயு விலை தற்போதைய விலை மட்டத்திலேயே தொடர அதிக வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## மியான்மர் அகதிகளை நாடுகடத்தத் தீர்மானம்

கொழும்பு, ஜன.4

அண்மையில் முல்லைத்தீவுக் கடலில் தஞ்சமடைந்த மியான்மர் நாட்டு ரோஹிங்ய புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு மியான்மர் அரசாங்கத்துடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளது.

சட்டரீதியான நடைமுறைகள், கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர் இதுதொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் வரை அவர்கள் இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் பெருவிழா மார்ச் 14இல்

ஆய்வுக்கு விசேட குழு பயணம்

யாழ்ப்பாணம், ஜன.4

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இந்த வருடம் மார்ச் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற வுள்ளது.

இது குறித்து மலசலகூட வசதிகள், புனரமைப்புகள் உட்பட பல்வேறுபட்ட களநிலைமைகள் குறித்து ஆராய ஜனவரி மாத இறுதிப் பகுதியில் விசேட குழு ஒன்று கச்சதீவு நோக்கிப் பயணிக்க வுள்ளதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்தக் குழுவில் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலகத்தினர், ஆலயத்தின் மதகுரு , மாவட்ட செயலர் உள்ளிட்டோர் உள்ளடங்குகின்றனர்.

கடந்த வருடம் இந்திய மீனவர்களின் போராட்டம் காரணமாக இந்தியாவிலிருந்து பக்தர்கள் வருகை தராத நிலையில் இந்த வருடம் இந்தியாவிலிருந்து அதிகளவான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-125)



## தொழில்தேவைக்கு உப்பு இறக்குமதி

விலைமனுக் கோரல் ஆரம்பம்

கொழும்பு, ஜன.4

30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கான விலைமனுக் கோரல் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக 20,000 மெற்றிக்தொன் உப்பு இறக்குமதி செய்யப்படவுள்ளது. இறக்குமதி செய்யப்படும் உப்பை கைத்தொழில் அமைச்சின் கீழ் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்படும் உப்பு தொழில் தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும் என்றும் சாதாரண மக்களின் பாவனைக்கு வழங்கப்படாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 'லைசென்ஸ்' தாமதம்; இந்த மாதத்துக்குள் தீர்வு

கொழும்பு, ஜன.4

அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒரு இலட்சத்து 30ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் இந்த மாதத்துக்குள் வழங்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து பிரதி அமைச்சர் துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு ஆகியோர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு மேற்கொண்ட பரிசோதனை விஜயத்தின் போதே இதனைத் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## அமெரிக்கத் தூதுவருடன் மனோகணேசன் சந்திப்பு

கொழும்பு, ஜன.4

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோகணேசனுக்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலிசங்குக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நகர்வு, அதிகாரப் பகிர்வு, மலையகப் பெருந்தோட்டக் காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள் உள்ளிட்டவை இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உணவுப் பொருள்களுக்கான விசேட வரி நீடிப்பு

கொழும்பு, ஜன.4

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்படத் தெரிவு செய்யப்பட்ட 63 வகையான பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி விசேட வர்த்தகப் பொருள் வரியை எவ்வித திருத்தங்களுமின்றி தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வெளியிடப்பட்ட குறித்த வர்த்தமானி அறிவித்தலின்படி, பருப்பு, வெள்ளைச் சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சிவப்பு வெங்காயம், தேங்காய் எண்ணெய், தாவர எண்ணெய், ரின் மீன் மற்றும் காய்ந்த மிளகாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் உட்பட 63 பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தை மாற்றமில்லாமல் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விரிவுரையாளர்கள் பற்றாக்குறை

கொழும்பு, ஜன.4

நாட்டில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் பல்கலைக்கழகக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் ஊதியத்தில் விதிக்கப்பட்ட தனியாள் வரி போன்ற காரணங்களினால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

மொத்தத் தேவையில் 50 சதவீத அளவுக்கு விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)




பாவியர் போற இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் எண்டு சொல்லுவினம். அப்பிடிப் பார்த்தால், இஞ்சையுள்ள சனங்கள் எல்லாருமே கடும் பாவம் செய்த ஆக்கள் போல. அதாலதான் இஞ்சையுள்ள றோட்டெல்லாம் பள்ளமும் திட்டியுமாக் கிடக்கு. அப்பிடி இருக்கிற பள்ளம்,திட்டியள் சும்மா இருக்காமல் பலியெடுக்கிறதுதான் இன்னும் பயங்கரம். புளியம்பொக்கணை பாலம் கட்டுற பள்ளத்துக்க இருந்து முந்தநாள் ரண்டு இளம் பெடியளின்ர 'பொடி' எடுத்த செய்தி உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். வன்னிக்கு வந்திட்டு திருகோணமலைக்கு திரும்பி இந்த ரண்டு பேரும் இரவுநேரத்தில போயிருக்கினம். கண்மண் தெரியாத இருட்டும், பழக்கமில்லாத பாதையும் எண்டதால அவைக்கு பாலத்துக்குப் பதிலா பள்ளம் இருக்கெண்டு தெரியாமல், அப்பிடியே மோட்டார்பைக்கோட அதுக்க விழுந்திட்டினம்.

'இரவு வீட்டை வந்திடுவம்' எண்டு சொல்லிப் போட்டு வெளிக்கிட்ட பெடியளைக் காணேலை எண்டு வீட்டுக்காரர் தேடித்திரிஞ்சு களைச்சுப் போய், கடைசியா திருகோணமலைப் பொலிஸில முறைப்பாடு குடுத்திருக்கினம். போனும் வேலை செய்யேலை. ஆக்களும் இல்லை. அதால அவைக்கு என்ன நடந்திருக்கும் எண்டு வீட்டுக்காரரும் அந்தரிச்சபடி இருந்திருக்கினம். ஆனால் மூண்டு நாளைக்குப் பிறகுதான் 'என்ன ஏதோ மணக்குது?' எண்டுசனங்கள் புளியம்பொக்கணைப் பாலம் கட்டுற இடத்தில இருக்கிற பள்ளத்தை எட்டிப் பாக்கேக்கதான், இந்த ரண்டு பெடியளும் செத்துப் போய்பள்ளத்துக்க மிதக்கிறதைக் கண்டிருக்கினம். இந்தப் பெடியள் ரண்டு பேரும் தவறுதலாப் போய் பள்ளத்துக்க விழுந்திருந்தாலும், இதுக்கு முழுக் காரணமும் அந்தப் பாலத்தைக் கட்ட வெளிக்கிட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபைதான்.

2020 ஆம் ஆண்டு உந்தப் பாலவேலை தொடங்கினது. இந்தப் பாலத்தோட சேர்ந்தாப்போல நெத்தலியாத்துப்பக்கம் தொடங்கின 2 பாலங்கள் கட்டி முடிச்சு எப்பவோ திறந்தாச்சு. ஆனால் இதுக்கு மட்டும் கொரோனா, சாமான் விலை கூடிப்போட்டுது எண்டுவிடிவு வரேலை. இப்பிடி நாலு வருசத்துக்கும் மேல இழுபட்ட பாலவேலையில ஒப்பந்தகாரருக்கும், இதுக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காரருக்கும் (ஆர்.டி.ஏ.காரர்) இடையில கொழுவல் வர, ஒப்பந்தகாரர் அதைக் கட்டிமுடிக்காமல் போட்டினம். அதுக்குப் பிறகு பாலவேலைக்காகத் தோண்டி கொங்கிறீட், கம்பியள் போடப்பட்ட பள்ளத்துக்கு முன்னால ஒரு சிக்னல் லைட், காவலாளி, அறிவிப்பு பலகை, இரும்புத்தடை எல்லாம் ஆர்.டி.ஏ.காரர் போட்டுத்தான் இருந்தவை. ஆனால் திடீரெண்டு என்ன நினைச்சினமோ தெரியேலை, அதெல்லாத்தையும் வழிச்சுத் துடைச்சு ஏத்திக்கொண்டு போட்டினம். அதுக்குப் பிறகு அங்க காவலாளியும் இல்லை,சிக்னல் லைட்டும் இல்லை, அறிவிப்பு பலகையும் இல்லை. இதெல்லாம் இல்லாமல் வாய் பிளந்துகொண்டிருக்கிற அந்த மரணப் பொறிக்குள்ள இரவில மாட்டுப்பட்டா அநியாயமாச் சாகத்தானே வேணும். அந்த ரண்டு பெடியளையும் சாக்கொண்ட பாவம் இப்பிடிவிட்டேத்தித்தனமா இருந்த ஆர்.டி.ஏ.காரருக்குத்தான் போகும். ரண்டு உயிரைப் பலிவாங்கின பிறகு இனி சிக்னல் லைட்டையும்,அறிவிப்புப் பலகையையும் போட்டால் மட்டும் உந்தக் கொலைப் பாவம் இல்லாமல் போடுமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்கழியும் திருவெம்பாவையும்

மதுரகவி. காரை. எம்பி. அருளானந்தன்

தைமாதம் முதல் ஆனி மாதம் வரை ஆறு மாதங்கள் தேவர்களுக்குப் பகற்காலம் என்றும் ஆடி மாதம் முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள் அவர்களுக்கு இராக்காலம் எனவும் கூறப்படுகிறது. மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறை யாமம் ஆகும். மார்கழி மாதத்தில் அதிகாலை துயிலெழுந்து ஏனையோரையும் துயிலெழுப்பி கூட்டாகச் சென்று நீராடி நோன்பு நோற்று இறைவனை வழிபாடு செய்து உயர்வுபெறும் வழக்கம் சைவ மக்களிடையே மிகப் பண்டைய காலந்தொட்டு இருந்து வருகிறது.

இந்த நோன்பை மார்கழி நோன்பு எனவும், பாவை நோன்பு என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மார்கழி மாதத்துப் பூரணை நாளை இறுதியாகக் கொண்ட முதல் 10 நாள்களையும் திருவெம்பாவை காலம் என்பர். பத்தாம் நாள் திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய முழுமதி நாளாகும். இந்த நாள்களில் திருக்கோவில்களிலே அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடப்படும். அதனைத் தொடர்ந்து திருவெம்பாவை பாடப்படும்.

சிவன் கோவில்களில் சிறப்பாக நடைபெற்றாலும் ஊர்கள் தோறும் உள்ள எல்லா ஆலயங்களிலும் பக்திபூர்வமாக நடைபெறும். மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவண்ணாமலையில் சிவனைத் தரிசனம் செய்ய வந்தபோது 'மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள், வழக்கப்படி பொழுது புலர்வதற்கு முன் வைகறை யாமத்தில் துயிலெழுந்து வீடு வீடாக தோழியர்களையும் கூவி அழைத்துக்கொண்டு ஆடியும், பாடியும் ஆற்றுக்கு சென்று நீராடி விட்டு பார்வதிதேவியின் பிரதிமையை ஈரமண்ணினால் செய்து வைத்து தத்தம் வேண்டுதல்கள் நிறைவேற வழிபாடு செய்யும் காட்சியை கண்ணுற்றார் போலும் தாமும் இறைவனைத் தரிசிக்க விரும்பி தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவித்து கண்ணுற்ற நிகழ்வுடன் தன்னையும் இணைத்துக்கொண்டு நாயகன் நாயகி பாவத்தில் பாவைப் பாட்டுகளைப் பாடி தன் நிலையை வெளிப்படுத்த எண்ணினார் போலும்' இவ்வாறாக மாணிக்கவாசகரால் திருவண்ணாமலையில் அருளப்பட்ட திருவெம்பாவை பாடல்களை இன்றும் சைவக் கோவில்களில் மார்கழி மாதத்துடன் பூர்வபட்ச ஆறாம் நாள் தொடங்கும் பூரணை ஈறாகவுள்ள பத்து நாள்களும்அதிகாலையில் உள்ளம் உருகப் பாடி பரவுவதை சைவ மக்கள் நியமமாக கொண்டுவருகின்றனர்.

திருவெம்பாவையின் நிறைவு தினமாகிய திருவாதிரை திருநாளில் அதிகாலையில் சிதம்பரத்தில் நடேஷர் அபிஷேகமும் ஆருத்ரா தரிசனமும் இடம்பெறும். இந்த பத்து நாள்களும் திருவெம்பாவை ஓதுகின்ற பொழுதை சிவப்பொழுதாக எண்ணி மகிழ்ந்து வாழ்வோம்.



# சேவைக்கு திரும்பும் வடதாரகை

யாழ்ப்பாணம், ஜன.4

நெடுந்தீவில் செயலிழந்து தரித்துவிடப்பட்டுள்ள வடதாரகை விரைவில் சேவைக்கு திரும்பவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தற்போது குமுதினி மற்றும் நெடுந்தாரகை படகுகள் நெடுந்தீவுக்கான சேவைகளை மேற்கொள்கின்றன. நெடுந்தீவுக்கான மற்றுமொரு படகுச் சேவையான வடதாரகை அண்மையில் செயலிழந்து திருத்தப் பணிகளுக்காக நெடுந்தீவு இறங்குதுறை அருகே தரித்துவிடப்பட்டிருந்தது.

படகின் நீர்ப் பம்பி திருத்துவதற்காக கொழும்புக்கு எடுத்து செல்லப்பட்ட நிலையில் எதிர்வரும் வாரமளவில் அதனை எடுத்துவந்து பொருத்தி சேவைகளை மீண்டும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# தரிசன யாத்திரை

கொடிகாமம், ஜன. 4

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் தரிசனயாத்திரை நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, கைதடிப் பிள்ளையார், முறிகண்டிப் பிள்ளையார், வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன், மாதம்பை முருகன் ஆலயம், சிலாபம் திரௌபதி ஆலயம், கொழும்பு முன்னேஸ்வரம், பாணந்துறை முருகன் ஆலயம், காலி முருகன் ஆலயம், காலி சிவன் ஆலயம், தொண்டீஸ்வரம் ஆகிய ஆலயங்களினூடாக இடம்பெறவுள்ளது.

யாத்திரையில் இணைந்து கொள்ள உள்ள அடியார்கள் இலக்கம் 0779236552 என்ற வட்சப் இலக்கத்துக்கு தங்கள் முழுப் பெயர், முகவரி, வட்சப் தொலைபேசி இலக்கம் என்பவற்றை அனுப்ப வேண்டும். யாத்திரைக்கான திகதி விரைவில் அறியத்தரப்படும் என சபையின் தேசிய ஆணையாளர் சிவத்திரு. வை.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ச-25, 159)

# பரிசளிப்பு

கொடிகாமம், ஜன. 4

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு அதிபர் பி.தர்மபூபதி தலைமையில் பாடசாலையின் ஞானம் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது .

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜெகதாசன், சிறப்பு விருந்தின ராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதாமலர் முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25, 159)

# திருவெம்பாவை



யாழ்ப்பாணம், ஜன. 4

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் இன்று முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவர்க்க வாயில் ஏகாதசி உற்சவமும், 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடேஷர் ஆருத்ரா தரிசனமும் இடம்பெறும்என ஆலயநிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச- 25)

⊗⊗⊗

சாவகச்சேரி, ஜன. 4

சரித்திர பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெறுவதால் ஆலய மகோற்சவகாலமானதிருவெம்பாவை காலத்தில் உற்சவம் நடைபெறமாட்டாது .

திருவெம்பாவை தொடங்கும் நாளான இன்று சனிக்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரையான காலப் பகுதியில் பத்து நாள்களும் காலை 6 மணிக்கு திருவெம்பாவைப் பூஜையும் காலை 9.30 மணிக்கு ,பிற்பகல் 4 மணிக்கும் விசேட அபிஷேகங்களும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா சிவ. பஞ்சாகமம் தெரிவித்துள்ளார். (ச-22-131)

# பிள்ளையார் பெருங்கதை சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.4

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிள்ளையார் பெருங்கதை விரத விசேட உற்சவ நிகழ்வை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத்தலைவர் கலாநிதி பிரம்பஸ்ரீ ம.பாலகைலாசநாதக் குருக்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை "விநாயகரும் பெருங்கதை விரதமும் " எனும் விட யப்பொருளில் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் நிகழ்த்தவுள்ளார். (ச-25)

# சோலைவரிக்கு 10 வீதக் கழிவு

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலகம், உடுவில் உப அலுவலகம் ஆகியவற்றில் 2025 ஆம் ஆண்டுக்கான சோலைவரி செலுத்துபவர்களுக்கு பத்து வீதக் கழிவு வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே, பொதுமக்கள் தங்களின் ஆதனத்துக்கான சோலை வரியை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வேலைநாள்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரையும், தைப் பொங்கல் விடுமுறை தவிர்ந்த விடுமுறை நாள்களிலும், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 8.30 மணி முதல் பி.ப. 2 மணி வரையும் செலுத்திப் பத்து வீதக் கழிவைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-25, 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

"அவரவருடைய தவறுகளுக்கு அவரவர் சூட்டிக்கொள்ளும் பெயரே அனுபவம்."


– ஒஸ்கார் வைல்ட் –

# நித்தியகண்டம் பூரண ஆயுசு

வன்னிப் பிராந்தியப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்றும், பிரதான பாடங்களுக்குக்கூட நீண்டகாலமாக நிலவும் ஆசிரியப் பற்றாக்குறை இன்னமும் நிவர்த்தி செய்யப்படவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினரான துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியிருக்கின்றார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேவைக்கும் அதிகமான ஆசிரியர்கள் இருக்கும்போது, வன்னிப் பிராந்தியப் பாடசாலைகள் ஆளணிப் பற்றாக்குறையால் மிகையாகப் பாதிக்கப்படுவது அபத்தமானது என்றும் நொந்திருக்கின்றார் அவர். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்ந்தாலும், வன்னிப் பிராந்தியப் பாடசாலைகளுக்கும் அங்கு நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறைக்கும் தீர்வென்பது இப்போதைக்கு சாத்தியமில்லை என்பதாகவே கடந்த சில வருடங்கள் நகர்ந்துகொண்டிருக்கின்றன. வெளிமாவட்டச் சேவைக்காலத்தைக் கட்டாயமாக்கிய பின்னரும் இந்த நிலை தொடர்கின்றது என்றால், ஆளணிப் பற்றாக்குறைக்கு அப்பாற்பட்ட பிரச்சினைகள்தான் இதற்கெல்லாம் காரணம் என்பது அடிப்படைப் புரிதலாக அமையவேண்டிய விடயம். எனவே, 'யாழ்ப்பாணத்தில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால், வன்னியிலோ பற்றாக்குறை நிலவுகின்றது' என்ற சாரப்பட இந்தப் பிரச்சினையை அணுகுவதே முதலாவதும் பெரியதுமான தவறாகும்.

ஆசிரியத்துவம் என்பது ஆக்கபூர்வமான சிந்தனைகளுடன் இரண்டறக் கலந்த விடயம். உள அமைதி, மனத்திடம், சமநிலையான குடும்ப வாழ்வு, வறுமையற்ற நிலை இவை அனைத்திலும் இருந்துதான் ஆக்கபூர்வமான சிந்தனைகள் ஊற்றெடுக்கின்றன. இவ்வாறிருக்கையில், கட்டாய சேவைக்குப் பின்னரும் வெளிமாவட்டங்களில் ஆசிரியர்களை அடைத்து வைத்திருந்து 'ஆசிரியத் துவத்தைத் திறந்தவெளிச் சிறையாக' மாற்றுவது ஏற்கத் தக்கதல்ல. ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் தனிப்பட்ட வாழ்க்கை இருக்கின்றது. குடும்பப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை கண்ணியத்துடன் அணுகுவதுதான் அழகும் மதிப்புமாகும். எனவே, வெளிமாவட்டங்களுக்கான கட்டாய சேவைக்காலத்தை நீடிப்பதும், பிறிதொரு மீள்நிரப்புகை வரும்வரைக்கும் அந்த ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்காமல் (கட்டாய சேவைக்காலம் முடிந்த பின்னரும்) இழுத்தடிப்பதும் ஆசிரியத்துவத்தைப் பலவீனப்படுத்துமே அன்றி ஒருபோதும் மேம்படுத்தாது.

முன்பெல்லாம் ஆசிரியர்களாக வரவேண்டும் என்று ஓர்மத்துடனும் வீச்சுடனும் கல்விகற்ற மாணவர்கள் ஏராளம். ஆனால், இன்றோ ஆசிரியர்கள் கடைநிலை ஊழியர்கள் போலவே அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றனர். ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் ஊதியப் பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் வறுமையுடன் போராடும் வர்க்கமாக அவர்கள் மாற்றப்பட்டிருக்கின்றனர். எனவே, பொருளாதார இடர்பாட்டைச் சந்திக்கநேரும் என்பதால், இன்று ஆசிரியத்துவத்தை உதறும் பட்டதாரிகள் ஏராளம். அத்துடன், வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறைகள் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கும் பட்சத்தில் நிச்சயம் இந்தப் பிரச்சினையை ஓரளவுக்கேனும் நிவர்த்திசெய்யலாம். அடிப்படைக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் விட்டுவிட்டு, ஆசிரியர்களின் உள அமைதியை மலினப்படுத்தி - மனதளவில் வதைத்து கற்பிக்கவைப்பதால் ஒருபோதும் கற்பித்தல் பணிகள் முழுமையடையப் போவதில்லை. தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை இவை இரண்டும் இரு கண்கள் போன்றவை. ஆசிரியர்கள் மட்டும் விதிவிலக்கல்லர். ஆகவே, பிரச்சினை என்னவோ அதைச் சரி செய்யுங்கள். குறிப்பாக எந்தெந்த மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றதோ, அங்கு மாவட்ட ரீதியாகப் புதிதாக ஆசிரியர்களை உள்வாங்குவதே இந்தப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அமையும். அதைவிடுத்து இருக்கும் ஆளணியை அங்கும் இங்குமாக மாற்றிக்கொண்டிருந்தால், நித்தியகண்டம் பூரண ஆயுசு என்பது போல இந்தப் பிரச்சினைகள் நீண்டு கொண்டேதான் செல்லும்.




# புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்குரிமையை உறுதிசெய்க

தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து



கொழும்பு, ஜன.4

**புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் சிறைக்கைதிகள் ஆகியோரின் வாக்குரிமையை உறுதி செய்யுறுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் நினைவூட்டல் கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மீண்டும் அனுப்பவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஆகவே, விரைந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் குறித்த இரு தரப்பினருக்குமான வாக்குரிமையை உறுதி செய்யமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



# நெல் கொள்வனவு இம்மாதம்

கொழும்பு, ஜன.4

பெரும்போகத்துக்கான நெல் கொள்வனவு இந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு விவசாயிகளிடம் இருந்து அதிகளவான நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-28)

# கெஹலிய குடும்பம் மீதான தடைகள் நீடிப்பு

கொழும்பு, ஜன.4

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதிக் கொள்கை நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தொழில் மேம்பாட்டு அதிகாரசபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜன.4

தேசிய தொழில்கள் மேம்பாட்டு அதிகாரசபையின் புதிய தலைவராக லக்ஷ்மன் அபேசேகர நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனியார் மற்றும் அரச முகாமைத்துவத் துறைகளில் 25 வருடங்களுக்கு மேல் அனுபவமுடைய சிரேஷ்ட அலுவலர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22)




# தொழிலாளருக்காக 'வட்ஸ் அப்' செயலி

கொழும்பு, ஜன.4

தனியார் மற்றும் அரை அரச ஊழியர்களின் சேவைப் பிரச்சினைகளுக்கு விரைவாகப் பதில் அளிப்பதற்காக தொழிலாளர் அமைச்சினால் 0707 22 78 77 என்ற புதிய ' வட்ஸ் அப் 'இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
ஞாயிற்றுக்கிழமை - மார்கழி - 21
05.01.2025
சுபநேரம் : 09.31 - 11.01
ராகுகாலம் : 05.01 - 06.31

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மக்களின் கோபத்தின் வெளிப்பாடு

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விக்னேஸ்வரன் நேற்று அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 4

நாடாளுமன்றத்தேர்தல் முடிவுகளானவை, தமிழ் மக்களின் கோபத்தின் வெளிப்பாடு என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே நாடாளுமன்ற முன்னாள்உறுப்பினர்விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியே தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குக் காரணமாகும். தமிழ் மக்கள் அவர்களது பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வொன்றை எதிர்பார்த்தனர். இருப்பினும் அந்தத் தீர்வு வழங்கப்படவில்லை. மாறாக அவர்கள் தமது பிரதிநிதிகள் நாடாளுமன்ற வரப்பிரசாதங்களை அனுபவிப்பதையும், சுயநல நோக்கங்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதையும் அவதானித்தனர். எனவே நடைபெற்றுமுடிந்த தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களின் கோபத்தின் வெளிப்பாடாகும்.

இருப்பினும் வடமாகாணத்தில் வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கும் விதத்தை அவதானிக்கும்போது, தமிழ் மக்கள் தமிழ்த்தேசியத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஏனெனில் தெற்குக்கு நேயமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதன் போன்றோர் கடந்த முறை தேர்தலில் பெற்றதை விட மிகக்குறைந்தளவு வாக்குகளையே இம்முறை பெற்றுள்ளனர். எதிர்வருங்காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது என்பதிலேயே அந்தக் கட்சிக்கான ஆதரவு தங்கியிருக்கிறது - என்றுள்ளது. (ம-இ)

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன்
ஆச்சார்யார் (27 வருட அனுபவம்)
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை.
Tel : 077 675 1649
(CS/57101) J-1

### மரண அறிவித்தல்

**திருமதி கஜன் யாழினி**

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும். இல.126. கனகாம்பிகைக் குளம் (அன்னை இல்ல வீதி) கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கஜன் யாழினி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.01.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமானந்தம்-அமிர்தாம்பிகை தம்பதியின் அன்பு மகளும். வரதீஸ்வரன்-மோகனாம்பிகை தம்பதியின் மருமகளும். கஜன் அவர்களின் அருமை மனைவியும். இசைநிலா. காலஞ்சென்ற அபிவர்ணா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.01.2025) வெள்ளிக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 126, கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

நல்லூர் கந்தன் திருமண சேவை
அனைத்து உறவுகளுக்கும்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.
எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்கும். எல்லா விதமான தொழில் வாய்ப்புள்ளவர்கள் பிறைவேட் கம்பனி வெளிநாட்டு மணமகள்கள் மணமகன்கள் கைவசம் உண்டு. நீங்கள் விரும்பியவாறு பெற்றுக் கொள்ளவும். விரைவாகவும் திருமணம் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு வி. ஜெயந்தி
(CS/2176) J-1
077 973 3183

## கடலடியில் காணாமல்போன நெடுந்தாரகையின் நங்கூரம்!

யாழ்ப்பாணம், ஜன. 4

நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் கடலில் காணாமல் போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தாழமுக்கக் காலத்தில் படகின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, நெடுந்தீவில் மற்றொரு பகுதியை நோக்கி தரித்து விடுவதற்காக படகு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதன்போதே நங்கூரம் கடலில் காணாமல் போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

### 28ஆம் வருட நினைவுகள்

**அமரர் வி.எஸ்.குணசிங்கம்**

(ஓய்வுபெற்ற வன பரிபாலனத் திணைக்கள எழுதுநர்)



மலர்வு 05.02.1931 உதிர்வு 16.12.1996

நிஜமொன்று நீங்கி வருடங்கள் பல
அதன் நினைவுகள் மட்டும்
நிழலாக பின்தொடர...
உம் வாழ்வின் பதிவுகளை
பற்றி நிற்கும் உறவுகள் நாம்....
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

(CS/57113) J-1

இல. 3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

முத்தால் 01 . 02 . 1933



வித்தால் 27 . 12 . 2022

**அமரர் வேலுப்பிள்ளை கயிலாயபிள்ளை**

(ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் )

எம் அன்பு நிறைந்த அப்பாவே ஆலமரம் போல் நீங்கள் வாழ்ந்து
அதில் இளைப்பாறும் பறவைகள் போன்று பிள்ளைகளும் வாழ்ந்தோம்.
எம்மை எல்லாம் விட்டுச் செல்ல எப்படி அப்பா மனம் வந்தது.
சிறகுகள் உடைந்த பறவைகள் போன்று இன்று வாழ்கின்றோம்
உம்மை நினைக்காத நேரம் இல்லை அப்பா எல்லோரையும்
மதித்து நடக்கும் பண்பும் பற்றுடன் சுற்றத்தவரை அரவணைத்து
வாழ்ந்த சீர் பெற்ற வாழ்க்கை என்றும் எம் வாழ்நாள் வரை
நினைவிருக்கும் அப்பா இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையெனில்
நீங்களே வேண்டும் அப்பாவே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

(CR/44023) J-1

குடும்பத்தினர்.
077 900 9420

## மாணவர்களின் கல்வியை உறுதிசெய்தல் அவசியம்

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.4

உயர்தரக் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலையிலிருந்து விலகி யிருப்பது தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும். எக்காரணம் கொண்டும் மாணவர்கள் கல்விவாய்ப்புகளை இழப்பதை நிறுத்தவேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகளின் உயர்தர வகுப்பறைகளில் மாணவர்கள் காணப்படுவது மிகவும் குறைவடைந்துள்ளது. குறிப்பாக ஆண் பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலகி வருகின்றமை அவதானிக்கப்படுகிறது.

எந்தவொரு சமூக அல்லது பொருளாதாரக் காரணங்களின் அடிப்படையில் பிள்ளைகள் கல்வியைத் தவறவிடக்கூடாது . 13 வருடங்கள் பாடசாலைக் கல்வியுடனான உயர்கல்விக்கான வாய்ப்புகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். (ச-இ)

### ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

04.01.2025



மயிலிட்டி தெற்கு வசாவிளானை. பிறப்பிடமாகவும். அம்பாள் வளவு குமரபுரம் பரந்தனை நிரந்தர வசிப்பிடமாகவும். ஓமந்தை அரச ஊழியர் வீட்டு திட்டத்தை தற்காலிக வசிப்பிடமாகவும். கொண்ட

**திரு. சின்னத்தம்பி ஆறுமுகம்**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்
கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி)

அன்பின் இருப்பிடமே!
பாசத்தின் பிறப்பிடமே ஐயா !

காலத்தின் சுழற்சியால் ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தன! ஆனால் நீங்கள் இறுதி நொடியில் பேசிய வார்த்தைகள் இன்னும் எங்கள் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

எங்கள் குடும்பத்தில். நிகழ்கின்ற ஒவ்வொரு முன்னேற்றமும் உங்களின் ஆசீர்வாதம் தான் என்று நினைத்து காலங்கள் கழிகின்றன!

நீங்கள் ஐயப்பனுக்கு கட்டிய இருமுடிப் பயணம் தொடர்கிறது உங்கள் பேரப்பிள்ளைகளால்! அதுவும் உங்கள் ஆசி தான்!

உங்கள் ஆத்மா ஐயப்பன் சன்னதியில் அமைதியாக இளைப்பாறி மகர ஜோதியாய் எங்களுக்கு ஆசி வழங்க ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
சுவாமியே சரணம் ஐயப்பா!

அரச ஊழியர் வீட்டு, திட்டம்
ஓமந்தை, வவுனியா.

நீங்காத நினைவுகளுடன்.
மனைவி, பிள்ளைகள்,
பேரர்கள், பூட்டப் பிள்ளைகள்.

(cr 44029) (N.I)

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம்**



14.08.1948 04.01.2022

ஆண்டுகள் மூன்றும்
வேகமாய் கடந்தாலும்
நெஞ்சத்தின் ஆழத்தில்
என்றும் நீங்காத
நினைவுகளுடன்.

குடும்பத்தினர்.

(CS/57104) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Angel International School

**Manipay Jaffna Chavakachcheri**

Admissions available for Classes from 3+ to A/L for the Academic Year 2024/2025 from 7th January 2025.

| School Location | Available Classes | Contact Number |
|---|---|---|
| Manipay | 3+ to A/L | 0777238300 |
| Jaffna | 3+ to Grade 6 | |
| Chavakachcheri | 3+ to Grade 6 | |

Please call us for more information.

-School Administration

### ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை

**மானிப்பாய் யாழ்ப்பாணம் சாவகச்சேரி**

3+ தொடக்கம் உயர்தரம் வரையான 2024/25 கல்வியாண்டுக்குரிய அனுமதிகளை ஜனவரி 07, 2025 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

| பாடசாலை | வகுப்புக்கள் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| மானிப்பாய் | 3+ to A/L | 0777238300 |
| யாழ்ப்பாணம் | 3+ to Grade 6 | |
| சாவகச்சேரி | 3+ to Grade 6 | |


**மேலதிக விபரங்களுக்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.**

(cr.44031) (N-1)

**- பாடசாலை நிர்வாகம்**

# மரண அறிவித்தல்

**மலர்வு**
27 . 10 . 2001



**உதிர்வு**
30 . 12 . 2024

## அருள்ராஜ் சுவேதன்

அளவெட்டி டச்சு வீதியினைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட அருள்ராஜ் சுவேதன் அவர்கள் கடந்த 30.12.2024 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அருள்ராஜ் (ஆசிரியர் யாழ்/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) - யமுனா (சமுர்த்தி முகாமையாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) தம்பதியரின் சிரேஸ்ட மகனும், சதுர்த்திகனின் சகோதரனும், காலஞ் சென்ற வர்களான பாலசுந்தரம் - புஸ்பராணி, அருளம்பலம் இரத்தினேஸ்வரி தம்பதியரின் பேரனும், காலஞ்சென்ற விஜயடேஸ்வரன் மற்றும் நகுலாம்பிகை தம்பதியரின் பெறாமகனும், கேதீஸ்வரநாதன் - சியாமளா, சுரேஸ்வரநாதன் - தாரணி, யோகேஸ்வரன் - அருந்ததி, ஞானேஸ்வரன் - சுகந்தினி ஆகியோரின் அன்பு மருமகனும், யானுஷனின் உடன்பிறவா சகோதரனும், டிலானி, டிஷானி, துஸான், கிஸான், நிகேதன், ஜனனி, பிரவீனா, திலக்ஷனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2025) ஞாயிற்றுக் கிழமை 55 Rue Gince, montreal, Q6H4NO7 இல் அமைந்துள்ள Aeterna Funeral Home இல் இலங்கை நேரப்படி பிற்பகல் 6.00 மணியில் இருந்து பார்வைக்கு வைக்கப்பட்டு பூதவுடல் தகனக் கிரியைக்காக இரவு 10.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பா.அருள்ராஜ் (தந்தை)**
**070 677 1567**

**டச்சு வீதி,**
**அளவெட்டி.**

(CS/57112) J-1

## 7ம் ஆண்டு நினைவுகூரல்

### கனகசபை இலங்கநாதன்

**மண்ணில்**
17 - 04 - 1940



**விண்ணில்**
04 - 01 - 2018

**'நண்பர்கள் கேளிர்' மற்றும் 'அறம் செய்' அமைப்பு**

# மரண அறிவித்தல்

**மலர்வு**
16 . 12 . 1958



**உதிர்வு**
26 . 12 . 2024

## கோபாலபிள்ளை குமரதாஸ் (ஈசன்)

வேலணை வடக்கு 5ம் வட்டாரம் இராசையா வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை குமரதாஸ் ( ஈசன் ) கடந்த 26.12.2024 இரவு France இல் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவி (France)யின் அன்புக் கணவரும், கோகுல் (France), நிவேத் (France)ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினபூபதி, சாட்சாயினி, முருகதாஸ், பரமானந்தன், மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சோதிலிங்கம், சச்சிதானந்தபிள்ளை மற்றும் சிவகுமார் (தொழிலதிபர் கொழும்பு), பத்மா, ஹேமா, ஜெயதேவி, சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகநாதன் அவர்களின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (06.01.2025) திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பி.ப 1.00 மணியிலிருந்து நடைபெற்று மாலை 6.00 மணியளவில் பிரான்சில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

**தகவல்**
**குடும்பத்தினர்**
தொடர்புகளுக்கு:
**+94779672031**

**41,கலட்டி ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

(CS/57099) N-1

## ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

### English Classes for Adults

**Easiest and quickest way to learn English language skills.**

1. Spoken
2. Written
3. Reading
4. Listening
5. Preparation for
   a. IELTS Life Skills
   b. Academic
   c. General

Commencing from 08.01.2025 In Jaffna & Manipay

**Duration: 1 year**
**Registration: Rs.2000/=**
**Course fee: Rs.50000/=**

The certificate will be issued based on an exam after the completion of the course.

| | | |
|---|---|---|
| Jaffna | - 5.00 pm - 7.00 pm | (Tuesday&Thursday & Friday) |
| Manipay | - 9.00 am - 11.00 am | (Monday, Wednesday & Friday) |

**For more information visit:**

ANGEL INTERNATIONAL SCHOOL, NO.17, RASAVINTHODDAM, JAFFNA.

ANGEL INTERNATIONAL SCHOOL MATHERS LANE MANIPAY.
021-225-5628 / 0773068997 / 0775435968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறலை கட்டுப்படுத்தமுடியாவிடின் நெடுந்தீவை இந்தியாவுக்கு வழங்குங்கள்

## நெடுந்தீவு மீனவர்கள் ஆவேசம்

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியைநிறுத்தமுடியவில்லையென்றால், நெடுந்தீவை இந்தியாவுக்கு வழங்குங்கள் என்று அந்தப் பகுதி மீனவர்கள் காட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவில் அத்துமீறிய மீன்பிடி அதிகரித்து வருகின்றது. இந்த நிலையிலேயே, நேற்று செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தி, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் தாம் அனுபவிக்கும் துன்பங்கள்தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள்மேலும் தெரிவித்ததாவது:- நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளாலும், அத்துமீறிய மீன்பிடியாலும் பெரும் துன்பங்களை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். கடந்த மாத இறுதியிலும், இந்தியாவின் இழுவைப் படகுகளால் பல்லாயிரம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல முடியாத அளவுக்கு நாம் இந்திய மீனவர்களால் வதைக்கப்படுகின்றோம்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளன. இதே நிலை தொடர்ந்தால், எம்மால் நெடுந்தீவில் வாழமுடியாத நிலை ஏற்படும். இந்திய மீனவர்கள் எமது வாழ்வாதாரத்தைச் சுரண்டி எம்மை வதைப்பதிலும் பார்க்க, எங்களை வேறு பிரதேசங்களுக்கு மாற்றிவிட்டு நெடுந்தீவை இந்தியாவுக்குத் தரைவார்த்து விடுங்கள் - என்றனர். (ம-20)

**வீடு வாடகைக்கு தேவை**

3 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை

தொடர்பு: 077 959 5930

**காணி விற்பனைக்குண்டு**

அச்சுவேலி சந்நிதி வீதி வீரபத்திரர் கோவிலடியில் 6 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 076 882 8694, 077 411 8851

**வீடு வாடகைக்கு உண்டு**

பரமேஸ்வரா சந்தி இராமநாதன் வீதியில் அமைந்துள்ளது. சகலவிதமான வசதிகளுடன் கூடிய வீடு

தொடர்பு: 077 411 8851

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21.03.1953 | 01.01.2025 |



**திருமதி ஜெயக்குமார் விஜயலக்ஷ்மி**

அப்புத்தளையை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, மற்றும் உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் விஜயலக்ஷ்மி அவர்கள் கடந்த (01.01.2025) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமிப்பிள்ளை-லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயக்குமாரின் அன்பு மனைவியும் நிரூபினாவின் பாசமிகு தாயாரும், பரமேஸ்வரி, குமாரசாமி, கோவிந்தராஜா ஆகியோரின் சகோதரியும் சிவகுமார், கிருஸ்ணகுமாரி, உருத்திரகுமாரி, பாலஈஸ்வரி, பாலஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
(ஜெயம்)-076 66[illegible]

(CS2178) P-1

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

### சபைக்குச் சொந்தமான சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்தில் கிழக்குப் புறமாக புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் மீள் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.01.06 - 2025.01.17 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2025.01.17 பி.ப 2.30 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2025.01.17 பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்

நீண்டகால குத்தகை

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | **Fronting to Oodakarai Lane – Ground Floor** | | | | |
| 01 | Shop 4 GF | 11,000.00 | 2,640,000.00 | 200,000.00 | 2,000.00 |
| | **Rear Oodakarai Lane- Ground Floor** | | | | |
| 02 | Shop 7 GF | 3,500.00 | 840,000.00 | 100,000.00 | 2,000.00 |
| | **Oodakarai Lane- Upper Floor** | | | | |
| 03 | Shop 11 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 04 | Shop 12 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 05 | Shop 13 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 06 | Shop 14 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 07 | Shop 15 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 08 | Shop 16 FF | 3,500.00 | 840,000.00 | 100,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

விண்ணப்பதாரி இலங்கையில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கடை வாடகை சம்பந்தமாக சபையினால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையை குறித்த மாத இறுதிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டு பெறுவதற்கும் இக்கால எல்லைக்குப் பிந்திச் செலுத்தப்படும் வாடகைத் தொகையின் 10% தண்டப்பணம் செலுத்துவதற்கும், தொடர்ந்து மூன்று மாதங்கள் பணம் செலுத்தத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. சித்திகர கேள்விதாரராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் 24.01.2025 ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினைப் பெற்று வியாபாரம் அல்லது தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதனுடன் தகுந்த காரணங்களின்றி வியாபார நிலையம் பூட்டி வைத்தல் கூடாது.
5. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ அல்லது மதுபான வகைகளையோ அல்லது போதைவஸ்துக்களையோ அல்லது தடை செய்யப்பட்ட வேறு எந்தப் பொருட்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
6. சித்திபெற்ற குத்தகைக்காரர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
7. சித்திபெற்ற குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
8. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமைச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
9. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுத் தலைவருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச.பாலருபன்,
செயலாளர்
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
04.01.2025


(CR/44033) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னப்பு பிறேமநாதன்

(முன்னாள் ஓய்வுபெற்ற முகாமையாளர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் - அச்சுவேலி)



அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும், புத்தூர் கிழக்கு புத்தூரை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னப்பு பிறேமநாதன் அவர்கள் கடந்த 31.12.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - பொன்னம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், மயூரனி, கஜீபன், ரேனோஷா, ஹம்சுதன், வேணுஜா, லினோஜா ஆகியோரின் தந்தையும், தனன்சயன், சேந்தன் ஆகியோரின் மாமனாரும், கயல், எயினி, தியா ஆகியோரின் பேரனும், சத்தியவிமலாதேவி, சமரக்கொடி, அமரர் சத்தியேஸ்வரன், அமரர் சற்குணராணி, கமலேஸ்வரி, அபூர்வசூரியா ஆகியோரின் சகோதரரும், அமரர் தம்பித்துரை, சிவபாதம், குகனேஸ்வரன், ஶ்ரீபவாணி ஆகியோரின் மைத்துனரும், நாகேஸ்வரி, அமரர் தனபாலசிங்கம், கணேசலிங்கம், குமார சிங்கம், சிவனேஸ்வரி, மகேஸ்வரி, மகேந்திரன், துரைசிங்கம், புலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், வைகரி, தர்விகா, தீரஜன், நீரஜன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும், சபீனா, சயீனா, சயானா, அபாஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.01.2024) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்:**

| | |
|---|---|
| கஜீபன் | 0094-771124034 (புத்தூர்) |
| குகனேஸ்வரன் | 0094-763784315 (அச்சுவேலி) |
| சிவபாதம் | 0044-730530523 (லண்டன்) |
| சூரி | 0044-7541081053 (லண்டன்) |

மலர்வு 09.12.1955

உதிர்வு 31.12.2024

பேக்கரி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(CR 44035) A

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 01 . 1967

மறைவு 17 . 12 . 2023

அமரர்

## நாகையா புவனேஸ்வரன்

திதி பஞ்சமி : 04.01.2025

ஓராண்டு கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள் உம்மை காலமெல்லாம்
நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம் உருகுகிறோம்
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/56177) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 11 . 1962

மறைவு 03 . 01 . 2025

## சிவசுப்பிரமணியம் ஜோய் கிருபாகரன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் ஜோய் கிருபாகரன் நேற்று (03.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் சிவசுப்பிரமணியம்-கிருபாமலர் தம்பதியரின் அன்பு மகனும் பாவிலு கிறிஸ்தோ-பாக்கியம் தம்பதியரின் மருமகனும் நேவிஸ் எமிலியின் (பவளம்) அன்புக் கணவரும், கொட்பிறி பிரசன்னா (பிரான்ஸ்), கொட்பிறி மேசியா ஆகியோரின் அன்புத்தந்தையும், டெஸ்மன் லோறன்ஸ்சின் (LOLC) அன்பு மாமனாரும் வோஸ்மிகா, அல்டோன்சா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான மாசிலாமணி (கிராமசேவகர்), செபமாலையம்மா, மோட்சலங்காரம் மற்றும் மரியதாஸ், நட்சேத்திரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (04.01.2025) சனிக்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

DR. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 345 0519, 077 082 4974

(CS 2181) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை, கனியமணல் அகழ்வை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவு

## மன்னார் ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானம்

மன்னார், ஜன. 4

மன்னார் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனியமணல் அகழ்வு போன்றவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.



மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் காற்றாலைத் திட்டத்தை விளக்குவதற்கு அந்தத் திட்டத்தின் முகாமையாளர் முயன்ற போது கிராம மட்ட பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதையடுத்தே, 'மக்கள் விரும்பாத திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது. எனவே, தற்காலிகமாக அவற்றைநிறுத்துங்கள்' என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க உத்தரவிட்டார்.

(ம-56)

## மணப் பெண் தேவை

1. யாழ்ப்பாணம். Roman catholic, குருகுலம், 1989, மூலம், Master Degeree, Engineer, uk மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. நல்லூர், இந்து, விஸ்வகுலம், 1987, அத்தம், BA (Hons). FIPA. FFA. Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3. யாழ்ப்பாணம் , இந்து, விஸ்வகுலம், 1988, சுவாதி, Quantity Surveyor. UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. K.K.S மாவிட்டபுரம் இந்து கௌரவகுலம் (K), 1988, ரோகிணி, MSc, France Citizen மாப்பிள்ளைக்கு பெண்தேவை
5. பளை, இந்து, கௌரவகுலம் (K), 1990, உத்திரட்டாதி, Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. கந்தர்மடம், இந்து, கௌரவகுலம் (V), 1989, உத்திராடம், MSc, Cannada. மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1990, உத்திரட்டாதி, Phd, Civil Engineer, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. சண்டிலிப்பாய்-தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1988, பூரட்டாதி, MBA, Canada Citizan மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1986, உத்திராடம், Air Space Engineering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண்தேவை.

எம்மிடம் எல்லா ஜாதியிலும், மணப் பெண், மாப்பிள்ளை உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் Unmarried, Divorce என்பனவும் உண்டு


WWW. thaalee.com Phone - 077 539 3728
திருமண சேவை whatsApp - 077 803 8193

# எம்.பி.க்களின் உணவுக்கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசு திட்டம்!

கொழும்பு, ஜன.4

நர்டாளுமன்றத்தில் உணவு உண்ணும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வசூலிக்கும் தொகையை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதுவரை காலமும் எம்.பி.க்களிடமிருந்து காலை உணவுக்கு 100 ரூபாவும், மதியம் 300 ரூபாவும் மட்டுமே வசூலிக்கப்பட்டு வந்தன. எனினும் அந்தத் தொகை போதாது என தேசிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார். (ச-இ)



# சட்டவிரோத கிருமிநாசினி கைப்பற்றப்பட்டது நேற்று!

வேலணை கிழக்கு கல்லுண்டிமுனை பகுதியில் இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாகக் கொண்டுவரப்பட்ட கிருமிநாசினிகள் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் படி, விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் கிருமிநாசினிகள் கைப்பற்றப்பட்டதுடன், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-20)


Quality that Quenches
HALTHOTA SPRINGS (PVT) LTD
No. 563, Nawala Rd, Rajagiriya.

நாட்டின் பிரதான குடிநீர் போத்தல்களை தயாரித்து மற்றும் விநியோகிக்கும் நிறுவனமான எங்களுக்கு

நாடு முழுவதுமாக விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

தொடர்பு:
077 318 4709 / 0777 224062

## மரண அறிவித்தல்



மலர்வு 24 . 05 . 1938

உதிர்வு 02 . 01 . 2025

### அமரர் சவரிமுத்து எமிலியானஸ்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து எமிலியானஸ் அவர்கள் நேற்று முன்தினம் (02.01.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து-மரியம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற ஜோசேப்பு-தாக்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மாலினி திரேஸ் அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, மற்றும் பூமணி, காலஞ்சென்ற கமலா மற்றும் வர்ணம் (ஜேர்மனி), துரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிங்கராயர் மற்றும் பெனடிக்ட் அன்ரனி காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சூரி (ஜேர்மனி), காலஞ்சென்ற முத்துராணி ஆகியோரின் மைத்துனரும் வைத்தியர் டேரியஸ் மரியன் (அவுஸ்ரேலியா), ரொனி எல்விஸ், ஜெபேத், யூடியக்குலின், கவிதா, நிஸாந்தன், மீரா, நிரோசன், தயன், ரிவானி ஆகியோரின் மாமனாரும் கிறிஸ்ரா, அஸ்லே, பேட்டன் ஆகியோரின் பெரிய தந்தையும் அஸ்றிட், அனோஜா, யஸ்மின், எவிலின், கரோஷன், கரோன்சியா, பபியன், லெனா, நிதின், சயானா, கற்றீனா, றிசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.01.2025) சனிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

44 புது வீதி 1ம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(CS 2182) V-1

தகவல்: குடும்பத்தினர்.
077 774 1112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-27)

## அடையாளம் காணப்பட்ட மூதாட்டியின் உடல்!

யாழ்ப்பாணம், ஜன. 4

சாவகச்சேரி கிராம்புவில் பகுதியில் உள்ள வயல் கிணறொன்றில் நேற்றுமுன்தினம் மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அவர் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சுந்தரம் அன்னப்பிள்ளை (வயது-84) என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-22-9-131)

## கஜமுகசுர சங்ஹாரம்

யாழ்ப்பாணம், ஜன.4

வட்டுக்கோட்டை வடக்கு பிரமநாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை படிப்பின் 20ஆம் நாளான இன்று சனிக்கிழமை மாலை கஜமுகசுர சங்ஹாரம் நடைபெறவுள்ளது. 21ஆம் நாளான நாளை பெருங்கதை படிப்பு விநாயகர் கஷ்டி விரதம் நிறைவு பெறும். (ச)

### சுண்ணக்கல்...

மன்ற உறுப்பினர் இளங்குமரன், வீதிக்குக் குறுக்காகக் காரை நிறுத்திப் பாரவூர்தியை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக சட்டவிரோதமாக சுண்ணக்கல் அகழ்வும், கடத்தலும் இடம்பெறுகின்றது என்று கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய பாரவூர்தி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றார்.

சம்பவம் தொடர்பில் பாரவூர்தியின் உரிமையாளர் தெரிவித்ததாவது:-

நாம் சட்டவிரோத சுண்ணக்கல் வர்த்தகத்தில் ஈடுபடவில்லை. முறையான அனுமதிகள் பெற்று உரிய ஆவணங்களுடன்தான் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அச்சுறுத்தும் வகையில் எம்மைப் பின்தொடர்ந்ததுடன், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். உரிய ஆவணங்களை பொலிஸாரிடம் சமர்ப்பித்துள்ளோம்.

அத்துடன், விபத்தை ஏற்படுத்தும் வகையில் காரைச் செலுத்தி, அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு எதிராகப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, வாகனத்தில் இருந்து மீட்கப்பட்ட இந்த சுண்ணக்கல்லின் மாதிரிகள் கனியவள திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-27-28)

### அமெரிக்காவில்...

அமெரிக்காவில் உள்ள பஸில் ராஜபக்சவின் சொத்துகள் குறித்து கடந்த காலத்தில் விமல் வீரவன்ஸ பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருந்தார். இந்தக் கருத்துகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று அவரிடம் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அமெரிக்காவில் பஸிலுக்குத் தாராளமாகச் சொத்துகள் உள்ளன. அரசாங்கம் முறையான விசாரணை நடத்துமென்றால் அது தொடர்பில் வாக்குமூலம் வழங்கத் தயாராக உள்ளேன் என்று விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

'அமெரிக்காவில் எந்தவொரு பணியும் புரியாத பஸில் ராஜபக்சவுக்கு எவ்வாறு அங்கு அதிகளவிலான சொத்துகள் இருக்கமுடியும். அவரது மகன் மற்றும் உறவினர்கள் சிலரது பெயரிலும் சொத்துக்கள் உள்ளன. இந்த அரசாங்கம் உண்மையிலேயே ஊழல், மோசடியாளர்கள் குறித்து விசாரணைகள் செய்வதாக எமக்குத் தெரியவில்லை' என்றும் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

### அதிகளவு...

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் மாகாண ஒருங்கிணைப்பு மையம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் அனைத்துப் பகுதிகளைப் போலவே வடக்கிலும் எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாமல் பொலிஸாரால் பணியாற்ற முடியும். கடந்த காலங்களைப் போல் அல்லாமல், பொலிஸாரின் சுதந்திரமான செயற்பாட்டை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

சட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதற்கு பொலிஸாருக்கு முழுமையான சுதந்திரம் உண்டு. சட்டத்தின் அடிப்படையில் செயற்படும்போது உங்களுக்கு (பொலிஸாருக்கு) ஏதேனும் அழுத்தம் முன்வைக்கப்பட்டால், அது தொடர்பில் எனக்குத் தெரிவியுங்கள். நிச்சயம் நான் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வேன்.

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்கில் இருந்து அதிகளவான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அத்துடன், வடக்கில் நிலவும் இதர பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-26)

### சடலம்...

தோண்டியெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி நபர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மன்னார் - இலுப்பைகடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்திருந்தார். அவரது சடலம் கல்லுண்டாய் சென். பீற்றர்ஸ் தேவாலய சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

சடலத்தை அடக்கம் செய்த விடயத்தில், உரிய நீதிமன்ற நடவடிக்கைகள் பின்பற்றப்படாததைத் தொடர்ந்து மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அந்த நபரின் சடலம் நேற்றுத் தோண்டியெடுக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஜெகநாதன் சுபாகினி முன்னிலையில், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன், தடயவியல் பொலிஸார், வலி. தென்மேற்கு பிரதேச சபையினர், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் முன்னிலையில் சடலம் அகழ்ந்து எடுக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. (அ-ம-125)

### மக்களின்...

துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற'தூய இலங்கை'பிராந்திய இணைப்பு அலுவலக நிகழ்வில், பொலிஸாருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் பொலிஸார் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பொது மக்கள் மத்தியில் பொலிஸாரைப்பற்றி நல்ல நிலைப்பாடு உள்ளதா? என்று கேட்டால் இல்லை என்பதே பதில். எனவே, இந்த எண்ணத்தை மாற்றும் வகையில் பொலிஸார் இந்த வருடத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றவேண்டும்.

இலங்கை முழுவதும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவான வாக்குகள் கிடைத்தன. அந்த மக்களாணையைக் காப்பாற்றும் கடப்பாடு எமக்கு உள்ளது. இன்று நான் செல்லும் இடங்களிலெல்லாம் வன்முறை, வாள்வெட்டு தொடர்பில் மக்கள் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்தி மக்கள் சுமுகமாக வாழ்வதற்கு வழியேற்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

பதில்பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவும் நிகழ்வில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### போக்குவரத்துப்...

தொடர்ந்து அவர் உடனடியாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கியுள்ளார்.

'தூய இலங்கை' வேலைத்திட்டத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பு மையத்தின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவும் கலந்துகொண்டார். பொலிஸாரின்பிரச்சினையை அவர் கேட்டறிந்தபோது, சில பொலிஸ் திணைக்களங்களில் ஜீப் பற்றாக்குறை நிலவுவதாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. வாகனங்கள் தேவைப்படும் பொலிஸ் திணைக்களங்களின் விவரங்களைக் கேட்டறிந்த அமைச்சர் நாளை (இன்று) கொழும்புக்கு வருகைதந்து வாகனங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறியுள்ளார். (அ-ம-26)

### வன்முறைக்...

குறித்த இளைஞர் 22 வயதுடையவர் என்றும், நவாலி பகுதியைச் சேர்ந்த அவர் வட்ஸ்அப் செயலி மூலம் வீடியோவைப் பகிர்ந்தார் எனவும் மானிப்பாய் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-125)

### மின்சாரம்...

நீர் இறைக்கும் மோட்டரில் ஏற்பட்ட மின்கசிவாலேயே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

மின்சாரம் தாக்கியதால் பாதிக்கப்பட்ட நபர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின் போது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-110)

### தாய்க்கும்,...

பெற்று, கிளிநொச்சிவலயக்கல்விப் பணிமனைக்கு முன்பாக, இடம்பெற்ற டிப்பர் விபத்தில் கஜன் அபிவர்ணி (வயது-2) என்ற பாலகி அன்றைய தினமே உயிரிழந்தார். அவருடைய தாயாரான கஜன் யாழினி (வயது-34) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

அவருடைய இறுதிச் சடங்குகள் நேற்று இடம்பெற்றன. இதைத் தொடர்ந்தே, விபத்தில் உயிரிழந்த தாய்க்கும் குழந்தைக்கும் நீதிகோரியும், விபத்து களைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியும் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு பொதுமக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-27)

### மக்கள்...

யில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் minister.educations@moe.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமோ, அல்லது 011 278 4092, 011 278 4825 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கோ தொடர்பு கொண்டு முறையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NEW SCIENCE WORLD
கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

VICTORY MUST

**2025 Revision Classes**
**Tamil And English Medium**

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

Physics } R.Kumaran, R. Kugen

Chemistry } Dias, K.T.Shivakumar

Biology – N.T. Gajenthiran

Com.Maths – V. Khariharan

ஆரம்பம் :- 05.01.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- 09.30 am

**அனுமதிகள் 02.01.2025 தொடக்கம் வழங்கப்படுகின்றன.**

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

(CR/43983) J.K

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:-
021 221 6690, 077 336 4030, 075 836 4055



## TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு

**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

பொறியியல் தொழினுட்பம்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

ஆரம்பம் : 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346

(CR/44028) J-1


## திருட்டு

கொழும்பு, ஜன.4

கோட்டை பழைய பொலிஸ் தலைமையக கட்டத்தின் ஐந்தாவது மாடியில் பொருத்தப்பட்டிருந்த ஏழு சி.சி.ரி.வி. கமராக்கள் மற்றும் இயந்திரம் என்பன திருடப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். திருடப்பட்ட உபகரணங்களின் மதிப்பு சுமார் 4 இலட்சம் ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாகவும் 3பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீறூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீட்டர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்பு: 070 290 2338, 076 017 1105


# மரண அறிவித்தல்



தோற்றம் 18.07.1935 மறைவு 28.12.2024

## கெங்காதேவி ஆனந்தகுமாரசுவாமி
### (காரிகாசிவதேவி)

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கெங்காதேவி ஆனந்தகுமாரசுவாமி கடந்த 28.12.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு (மலேயன் Pensioner) - சரஸ்வதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் B.A (ஓய்வுநிலை அதிபர், திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) - பூதாத்தைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆனந்தகுமாரசாமி B.A (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தன் (சிவாஜி) (Accountant, London) இன் பாசமிகு தாயாரும், ஜனனியின் (Customer Service Adviser) பாசமிகு மாமியாரும், பவன் (Management Accountant, London) இன் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி கிருபாகரன், Dr.கணேசலிங்கம் (R.M.O), மற்றும் குமாரலிங்கம் (J.P, Retd E.S, C.E.B) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி சிவராஜா, இராஜஇராஜேஸ்வரி விசுவநாத முதலியார் (அவுஸ்ரேலியா), பரமேஸ்வரி சச்சிதானந்தம், ஸ்ரீபாஸ்கரன் B.A (முன்னாள் தவிசாளர் பிரதேச சபை. KKS), கலாநிதி சுசீந்திரராசா PhD (வாழ்நாள் பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம்), Dr. மகேந்திரன் (E.N.T Surgeon), பாலேந்திரா (Provincial Director R.D.A) மற்றும் அவுஸ்ரேலியாவில் வசிக்கும் புவனேஸ்வரி சண்முகலிங்கம் B.A (ஓய்வுநிலை ஆசிரியை), ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/57096) J-1

தகவல் : குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.